## சுருக்கம்

குடியரசு நாள் 2010 – 26.1.2010 அன்று சென்னையில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றின் சார்பாக அலங்கார ஊர்திகள் பங்கேற்பு – செலவினத் தொகை ரூ.1,59,720/– (79,860+79,860) விடுவித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா–3)த் துறை

அரசு ஆணை (நிலை) எண்.16 நாள்: 18.02.2010

மாசி 6,

திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்கப்பட்டவை:

அரசு ஆணை (நிலை) எண்.26 தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (பொருட்காட்சி)த் துறை, நாள் 20.1.10.

––––

ஆணை:

மேலே படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 26.1.2010 அன்று சென்னையில் நடைபெற்ற குடியரசு தின விழாவில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றின் சார்பாக அலங்கார ஊர்திகள் பங்கேற்க அனுமதியும், அதற்கான செலவினத் தொகை ரூ.1,59,720/– (79,860+79,860) ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. அலங்கார ஊர்திகள் அமைக்கவுள்ள துறைகள் செலவு செய்ய அனுமதி அளிக்கப்பட்ட தொகைகளை சம்பந்தப்பட்ட தலைமைச் செயலக நிர்வாகத் துறைகள், சம்பந்தப்பட்ட துறை தலைவர்களிடமிருந்து செயற்குறிப்புகள் பெறப்படுவதற்கு முன்பாகவே தேவையான நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்குமாறு தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (பொருட்காட்சி) துறை கேட்டுக் கொண்டுள்ளது.

3. எனவே, மேலே படிக்கப்பட்டவையில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையின் அடிப்படையில், 26.1.2010 நாளன்று சென்னையில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பாக அலங்கார ஊர்தி பங்கேற்க அனுமதிக்கப்பட்ட ரூ.79,860/–(ரூபாய் எழுபத்தொன்பதாயிரத்து எண்ணூற்றி அறுபது மட்டும்) மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் சார்பாக அலங்கார ஊர்தி பங்கேற்க அனுமதிக்கப்பட்ட தொகை ரூ79,860/–(ரூபாய் எழுபத்தொன்பதாயிரத்து எண்ணூற்றி அறுபது மட்டும்)ஆக மொத்தம் ரூ.1,59,720/– (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பத்து ஒன்பதாயிரத்து எழுநூற்று இருபது மட்டும்) மிகாமல் செலவினம் மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையருக்கும் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழக நிர்வாக இயக்குநருக்கும் சேர்த்து நிதி ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினைப் பெற்று வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் மற்றும்

(த.பி.பா)



தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழக நிர்வாக இயக்குநர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

5. அலங்கார ஊர்திகள் அமைப்பதற்காக போக்குவரத்துக் கழகங்களிடமிருந்து பெறப்படும் வாகன அடிச்சட்டங்களுக்கான வாடகைக் கட்டணம் செய்தி மக்கள் தொடர்பு துறை மூலமாக நேர் செய்யப்படும்.

6. இச்செலவினம் கீழ்காணும் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை–ரூ.79,860/–

"2515 – 00, ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் – 001–
நெறிப்படுத்தலும் நிருவாகமும் – I – திட்டத்தில் சேராதது
AA ஊரக வளர்ச்சி இயக்ககம் –08 விளம்பரமும்
பிரச்சாரமும் 02 பொருட்காட்சி"

(த.தொ.கு.2515–00–001 AA 0824)

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் – ரூ.79,860/–

"2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் 02 சமூக நலன் 103 மகளிர் நலன் பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II மாநிலத் திட்டம் LC- தமிழ் நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் (மகளிர் திட்டம்) 11 மானியங்கள்– 02 பொதுவான மானியம் (ததொகு 2235 02 103 LC 1123)

7. இந்த ஆணை நிதித் துறையின் ஒப்புதலுடன் அ.சா.கு.எண். 6168/நிதி(ஊவ)/2010 நாள் 16.02.2010 படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–15
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம், சென்னை–32
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35
மாநில கணக்காயர், சென்னை–6/18/35

நகல்
அரசுச் செயலர்,
தமிழ் வளர்ச்சி அறநிலையம் மற்றும் செய்தி (பொருட்காட்சி)த் துறை
சென்னை–9

நிதி (ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி)த் துறை, சென்னை–9
இருப்புக் கோப்பு/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.